# இயலளவு விருத்தியின் பெண்ணிய பரிமாணம்: பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் செயற்றிட்ட அனுபவங்கள் இலங்கை



புகைப்படக்குறிப்பு: பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் செயற்றிட்டத்தின் பங்காளர்களாகவுள்ள மகளிர் உரிமை நிறுவனப் பிரதிநிதிகள், பெறுபேறுகளின் அறுவடைப் பயிற்சிப்பட்டறையின்போது (Results Harvesting Workshop) (2024)

## அறிமுகம்

பல்வேறுபட்ட சமூகப்பரப்புகளிடையேயான நிலைமாற்றீட்டு மாற்றத்தை ஏற்படுத்துவதில் பெண்களின் பிரதானமானதும் மாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுமான வகிபாகமானது தீர்மானம்-இயற்றல் செயன்முறைகளில் அவர்களது தீவிர ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

மகளிர் உரிமை நிறுவனங்கள் தமது விரிவான அனுபவம் மற்றும் அறிவு என்பவற்றினை அதிகளவில் பயன்படுத்தி இலங்கையில் பால்நிலை சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும் பெண்களை வலுவூட்டுவதற்குமான ஊக்கிகளாக சேவையாற்றுகின்றன. இம்முயற்சிகளை வடிவமைக்கப்பட்ட ஆதரவினை வழங்குவதனூடாக மேம்படுத்துவதற்காக பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை செயற்றிட்டம் உருவாக்கப்பட்டது. இது பெண்கள் உரிமைப் பிரச்சினைகளை வினைத்திறனுடன் தீர்வு செய்வதற்கான இயலளவை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இயலளவு விருத்தியானது நிறுவன முகாமைத்துவம், நிதி நிலைபேண் தகைமை, சேவை வழங்குகை, ஆதரித்து வாதிடல் மற்றும் வலையமைப்பு போன்ற பல்வகைமையான பரப்புகளைக் கொண்டதாக, இம்முயற்சிகளுக்கான ஒரு மூலைக்கல்லை அமைத்துள்ளது. இச்செயற்றிட்டம் முழுமைக்கும் WROs களினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின் வடிவமைப்பு, அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பு என்பவற்றினுள் பெண்ணிய அணுகுமுறைகள் தொடர்ச்சியாக ஒருங்கிணைக்கப்பட்டு வந்துள்ளன. WVL-SLஇனால் வழங்கப்பட்ட இயலளவு விருத்தி ஆதரவானது பெண்ணிய மற்றும் பால்நிலை சமத்துவக் கொள்கைகளில் ஆழமாக

வேரூன்றியிருந்ததுடன் தீங்கு பயக்காமை கொள்கையிலும் அவதானமாக இருந்தது. இந்த ஆதரவானது செயற்றிட்டத்தின் செயற்பாடுகளில் அவர்களது பிரதிநிதிகளின் வலுவூட்டல், பங்கேற்பு மற்றும் உள்ளிணைப்பு என்பவற்றை முன்னேற்றுவதன் ஊடாக WROs களைப் பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டிருந்தது. WVL-SL ஆனது WROs களினால் செயற்படுத்தப்பட்ட ஆரம்பமுனைப்புகளின் எண்ணிக்கை மற்றும் வகை, நிலைபேண்தன்மையை உறுதிசெய்தல் மற்றும் இயலளவு விருத்தி இடையீடுகளினூடான நடைமுறையிலுள்ள அபிவிருத்தி என்பவற்றை பின்தொடர்வதன் மூலம் இந்த ஆதரவின் தாக்கத்தை கண்காணித்தது. இலங்கையில், பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதைத் தொடர்வதில் அர்த்தம் மிக்க நிலைபேறான மாற்றத்திற்கு இட்டுசெல்வதுடன் இந்த முழுமையான அணுகுமுறையானது WROs களின் வினைத்திறனை மேம்படுத்துவது மாத்திரமன்றி அவர்களது நிறுவனத்தினுள் ஒரு பெண்ணியக் கொள்கை கலாச்சாரத்தை வளர்த்தெடுத்தது.

இந்த ஐந்தாண்டு கால செயற்றிட்டத்தினூடு வழங்கப்பட்டுள்ள இயலளவு விருத்தியானது மாற்றத்திற்குட்பட்டதாக, எழுகின்ற தேவைப்பாடுகள் மற்றும் சவால்களுக்கு எதிர்வினையாற்றுகின்ற மற்றும் முறைசாராத ஒன்றாக இருந்தவகையில் தந்திரோபாயரீதியானதாக, சான்றாதார அடிப்படையிலானதாக அத்துடன் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாக இருந்தது. WVL-SL செயற்றிட்ட பங்காளர்களான WROs சேவையாற்றிய சமூகத்தினுள் ஒரு தெளிவான தொடர் விளைவுடன்(cascading effecting) அது WROs களை வலுவூட்டிய அதேயளவுக்கு நிறுவனத்தினுள்ளேயான தனிநபர்களையும் வலுவூட்டியது. பெண்ணிய விழுமியங்களை கைக்கொண்டு, WROs வலுவூட்டப்பட்டவையாக எழுந்ததுடன் இலங்கையில் குரலை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் யுவதியினரை வலுவூட்டுதல் மற்றும் பிரதிநிதித்துவம் செய்தல், நிலைமாற்றீட்டு மாற்றங்களுக்குப் பங்களித்தல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை முன்னேற்றுதல் என்பவற்றுக்காக மேலும் தயார்படுத்தப்பட்டன.

## பின்னணி

இலங்கையில் WVL-SL செயற்றிட்டத்திற்கு முன்னர், பால்நிலை மற்றும் பெண்களது சமத்துவத்தை முன்னேற்றுவதில் கவனம் செலுத்திய, முழுமையாக அந்நோக்கிற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன[1]. இவை பெண்களை வலுவூட்டுவது தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களில் கவனம்கொண்டிருந்த அதேநேரம், பெண்களின் வலுவூட்டலை நோக்கிப்பணியாற்றுவதற்கான WROs களின் இயலளவை விருத்தி செய்வதிலும் கவனம் கொண்டிருந்தன.[2] WVL-SL செயற்றிட்டம் இந்த ஆரம்ப முனைப்புகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் பெருமளவைப் பயன்படுத்திக்கொண்டது. பல்வகைப்பரப்புகளிலும் விடயங்களிலும் பணியாற்றுவது, அதனூடாக சேவை வழங்குவது, ஆதரித்து வாதிடுவது மற்றும் வலையமைப்பு ஆரம்ப முனைப்புகளை மேம்படுத்துவது என்பதற்கான இயலளவு விருத்தியை மேம்படுத்துவதன் முக்கியத்துவமானது ஒரு பிரதான பாடமாக அமைகின்றது. இந்த இயலளவு விருத்தியானது

[1]சக்தி பால்நிலை சமத்துவ செயற்றிட்டம்(சக்தி), அமைதியை வரையறுக்கும் பெண்கள் செயற்றிட்டம் (WDP) இரண்டும் GAC இனால் நிதியளிக்கப்பட்டவை. GACஇன் தெளிவான பால்நிலை சமத்துவ கூறுகள் நல் ஆளுகை மற்றும் நிறுவன பலப்படுத்தும் செயற்றிட்டம் (GISP) நீதிக்கான அணுகல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை(SELAJSI) UNDP நடைமுறைப்படுத்தியது தொழில்முறை மற்றும் நிறுவன திறன்மேம்பாடு செயற்றிட்டத்திற்கு(SPICE) USAID நிதியளித்தது.

[2]ஜெயசுந்தர ஆர். மற்றும் தேவரப்பெரும A.(2019) Women in Sri Lanka: Equality Achievements Struggles and Empowerment- A Situation Analysis on Gender Equality and Women's Empowerment in Sri Lanka (பதிப்பிக்கப்படாதது) இந்த

எழுத்தாளர்களின் முன்னைய பணிகளை அடிப்படையாகக் கொண்டு, பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம்-இலங்கை செயற்றிட்டத்திற்காக தயாரிக்கப்பட்டது.

பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் நோக்கிய தொடர்ச்சியான முன்னேற்றத்தை இயலச் செய்து நீண்ட கால நிலைபேண் தன்மையையும் உறுதி செய்கின்றது.

தேசிய, மாவட்ட, பிரதேச செயலக மற்றும் சமூக மட்ட, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச மற்றும் இருதரப்பு முகவரகங்கள் என்பவற்றுடனான நெருங்கிய கலந்தாலோசனையானது இலங்கையில் WROs எதிர்கொண்ட அதிமுக்கிய மற்றும் பகிர்ந்துகொள்ளப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் சவால்கள் என்பன, தொழினுட்ப விடயங்கள் மற்றும் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பான பிரத்தியேக அறிவு, முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ பயிற்சி, ஆவணப்படுத்துதலும் அறிக்கையிடலும் முன்மொழிவுகளைத்தயாரித்தலும் நிதி ஈட்டுதலும், நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுபேற்றுச் சட்டகங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும் என்பவற்றிலான இயலளவு விருத்தி உட்பட பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் என்பவற்றை முன்னேற்றுவதற்கு அவசியம் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அவை, இது போன்ற ஏனைய உருவாக்கப்பட்டுள்ள WROs அத்துடன் அரசாங்க மற்றும் ஏனைய கடமையாற்றுனர்களிடமிருந்து கற்றுக்கொள்வதும் தகவல்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதும் அவசியம் என்பதையும் அடையாளங்கண்டுள்ளனர். செயற்றிட்டத்தின் பங்காளர்களாகவுள்ள WROs களின் இயலளவு விருத்தித் தேவைபற்றிய ஆழமான புரிதலைப் பெறுவதற்காக, ஒரு ஆரம்பக் கணிப்பீடு மற்றும் இயலளவுத் தேவை மதிப்பீடு என்பன நடாத்தப்பட்டு, இயலளவு விருத்தித்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## மகளிர் உரிமை நிறுவனங்களுக்கான மூலோபாய இயலளவு விருத்தி: தேவைகளை மதிப்பிடுதலும் தீர்வுகளை வடிவமைத்தலும்

WVL-SL செயற்றிட்டத்தினால் அதன் ஆரம்பக்கட்டத்தின்போது நடாத்தப்பட்ட WROs களினது ஆரம்ப கணிப்பீடு மற்றும் இயலளவுத் தேவை மதிப்பீடு ஒன்றானது WROs களின் பணிகளுக்கு ஆதரவு வழங்குவதன்பொருட்டான அவற்றின் இயலளவு விருத்தித் தேவைகள் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்தியது. இக்கணிப்பீடுகளின் பிரதான இலக்காக, அவர்களுடனான WVL-SLஇன் ஒத்துழைப்பினைக் கண்காணிப்பதற்கும் பின்தொடர்வதற்குமான அளவுக்குறிகாட்டிகளை செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் உருவாக்கிய செயற்பாட்டு அளவீட்டுச் சட்டகத்தின் அடிப்படையில் ஏற்படுத்திக்கொண்டு, WROs களின் இயலளவையும் செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்வதாக இருந்தது. மேலும், WVL-SL செயற்றிட்டத்தினுள் WROs களுக்கான பிரத்தியேக இயலளவு விருத்தி உதவியை வழங்குவதற்கு அவர்களது குறிப்பான இயலளவுத்தேவையை இனங்காண்பதும் அவசியமாக இருந்தது. அதனால், ஆரம்ப கணிப்பீட்டுடனேயே இயலளவுத் தேவை மதிப்பீடு ஒன்றையும் மேற்கொண்டமையானது WROs களினது தனித்துவமான தேவைகளுக்குப் பதிலளிக்கக்கூடிய இயலளவு விருத்தித்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு உதவியாக விளங்கியது.

### இயலளவுத்தேவை மதிப்பீட்டிலிருந்தான பிரதான கண்டடைவுகள்:

பல WROs, சமூகத்தில் பெண்களின் தேவைகள் கரிசனைகளையும் இப்பிரச்சினைகளின் தாக்கம் பற்றியும் தயக்கமின்றித் தெளிவாகச் சொல்வதற்கு உரிமைகள் அடிப்படையிலான சட்டகத்தைப் பயன்படுத்தின. ஆனால், கட்டமைக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக பெண்ணிய நோக்கிலிருந்தான தெளிவு இன்மையால் அனேகமாக மூலக்காரணிகளை இனங்காண்பதில் சவால்களைச் சந்தித்ததுடன் பிரச்சினைகளை பால்நிலை அடிப்படையிலான பாகுபாட்டுடன் தொடர்புபடுத்தின. இவ்வாறானபோதும், தமது தசாப்த கால அனுபவம்

மற்றும் சமூகத்துடனான தொடர்பின் பெறுபேறாக நடைமுறைச்சாத்தியமான தேவை மற்றும் தந்திரோபாய பால்நிலை ஈடுபாடுகளை சமப்படுத்தி, அவர்கள் கூருணர்வுள்ள இடையீடுகளை உருவாக்கினர். எவ்வாறாயினும், பல WROs குறுகிய கால தாக்கங்களை, நீண்டகால விளைவுகளிலிருந்து வேறுபடுத்துவது, தமது இடையீட்டின் ஆழமான தர்க்கத்தை வெளிப்படுத்துவது, தமது இடையீடுகளின் அடிப்படையாயுள்ள எடுகோள்களை விமர்சனரீதியாக ஆராய்வது மற்றும் தமது இடையீடுகள் எச்செயன்முறையினூடு மாற்றத்தைப் பாதிக்கும் என்பவை தொடர்பில் கடினப்பாடுகளைச் சந்தித்தன.

சில WROs விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பான இஸ்லாமியப் பெண்களின் உரிமைகள், சுதந்திர வர்த்தக வலயப் பெண்களின் தொழிலாளர் உரிமைகள் மற்றும் வீட்டுப்பணிப்பெண்களின் உரிமைகள் போன்றவற்றில் விதிவிலக்காகத் தனித்து நிற்கின்றன. இந்த WROs தமது கவனத்திற்குரிய பிரதேசங்களில் பொருத்தமான பிரச்சினைகளை வினைத்திறனுடன் வெளிப்படுத்துகின்ற, சமூக மட்டம் தொடக்கம் தேசிய மட்டம்வரையான வீச்சுடைய ஆதரித்து வாதிடும் ஆரம்பமுனைப்புகளை செயற்படுத்தின. அவை குறிப்பிட்ட பிரச்சினைப் பரப்புகளில் கவனம் கொண்டிருந்ததன் பெறுபேறாக மேலும் தெளிவான தந்திரோபாயங்களை வெளிப்படுத்தினர். அதேவேளை பரந்த நிகழ்ச்சிநிரலைக் கொண்டவை கவனம் செலுத்துதல் மற்றும் தாக்கம் தொடர்பான சவால்களுக்கு முகங்கொடுத்தனர். பெண்களின் உரிமைகளை முன்னுரிமைப்படுத்தியபோதும் சில WROs அடிப்படையான கட்டமைப்பு காரணிகளை வெளிப்படுத்துவதில் இடர்பாடுகளைக் கொண்டிருந்ததுடன் அவர்களது பணியைப் பாதிக்கும் சட்ட மற்றும் கொள்கை மாற்றங்கள் தொடர்பாக அறிந்துகொள்வதில் சவால்களுக்கும் முகங்கொடுத்தனர்

சில WROs தேசிய சட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டகங்கள் தொடர்பான புரிதலை நிரூபணம் செய்ததுடன் அவர்கள் எங்கே செயற்பட்டனரோ அதன் சமூக-பொருளாதார சூழமைவு தொடர்பான தெளிவான கிரகித்தலையும் வெளிக்காட்டினர் - குறிப்பாக வடக்கு கிழக்கில் உள்ளோர். இவர்கள் பெண்களின் அரசியல் பங்கேற்பை முன்னேற்றுவதுடன் சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள பெண்களின் உரிமைகளுக்காக ஆதரித்து வாதிட்டும் வருபவர்கள் ஆவர். எவ்வாறாயினும், ஏனைய WROs மாற்றமடைகின்ற சமூக-அரசியல் சூழமைவினை பொருட்படுத்தாது மாற்றமில்லாத தந்திரோபாயங்களை பயன்படுத்துவதாகத் தோன்றின.

சில WROs தகவல்களை அறிந்துகொள்பவர்களாக விளங்குவதற்கும் மாற்றம் மற்றும் நிறுவன காண்புநிலை என்பவற்றிற்காக கூட்டாக ஆதரித்து வாதிடுவதற்குமான தேசியமட்ட வலையமைப்புகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்ற அதேவேளை பல WROs, அது சிறியளவிலான அங்கீகாரத்தை அல்லது நன்மையையே வழங்குவதாக நம்புகின்ற காரணத்தால் வலையமைப்புகளின் ஊடாக கூட்டிணைவதில் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தின. அரசுடனான கூட்டிணைவு சட்டபூர்வமான தன்மைக்கு அவசியம் எனக்கருதப்பட்டாலும், இவ்வாறான கூட்டிணைவுகளின் பயனுறுதித்தன்மை வேறுபடுகின்றது. அத்துடன் ஒரு சில WROs மட்டுமே தமது சொந்த வலையமைப்புகளை உருவாக்குவதற்கும் தலைமைத்துவ வகிபாகங்களையும் தீவிர ஈடுபாட்டையும் பேணுவதற்கு ஆரம்ப முனைப்புகளை முன்னெடுத்தன.

மேலும், சில இளம் உறுப்பினர்கள் தலைமைத்துவத் திறன்களை வளர்த்தெடுப்பதற்கான தேவையை ஏற்றுக்கொண்டபோதும் அதிகார இயக்கவியல் மற்றும் இதனைப் பிரயோகிப்பது தொடர்பில் இடர்பட்டனர். மொழித்தடைகள், முன்மொழிவைத் தயாரித்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் என்பவற்றில் போதிய திறனின்மை போன்ற காரணிகள் காரணமாக நிதி திரட்டுவதில் சவால்கள் காணப்பட்டன.

## இயலளவு விருத்தித்திட்டம்

பங்காளர் WROs (அவர்களது பெண்ணியக் கண்ணோட்டத்தில்) உடனான ஒரு நெருக்கமான கலந்தாலோசனையுடன் உருவாக்கப்பட்ட WVL-SL இயலளவு விருத்தித் திட்டமானது இயலளவுத்தேவை மதிப்பீட்டின்போது எடுத்துக்காட்டப்பட்ட அவர்களது பல்வகை நடைமுறை மற்றும் தந்திரோபாயத் தேவைகளைத் தீர்வு செய்தது. இத்திட்டமானது செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கை விளைவுகளுடன் ஒத்துச்செல்கின்றது: முகாமைத்துவம் மற்றும் நிலைபேண்தன்மையை விருத்தி செய்தல், சேவை வழங்கல் மற்றும் ஆதரித்து வாதிடல் என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் பால்நிலை கூருணர்வுள்ள கொள்கை, சட்ட மற்றும் சமூக மாற்றத்திற்கான பெண்கள் உரிமைகள் தளங்கள், வலையமைப்புகள் மற்றும் நட்புறவுகளின் பயனுறுதித்தன்மையை அதிகரித்தல் முதலியவை.

ஒரு இயலளவு விருத்தித் திட்டமானது WROs களின் இயலளவு விருத்தித்தேவையை இருவழிகளில் தீர்வு செய்கின்றது. முதலாவதாக, தனிப்பட்ட நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவதன்மூலம், இரண்டாவதாக கூட்டுப்பயிற்சிகள் ஊடாக குழுக்களுக்கு இயலளவு விருத்தியை வழங்குவதன் மூலம். இயலளவு விருத்தித் திட்டமானது WROs களுக்கான இயலளவு விருத்தியை வழங்குவதற்குத் தகுதிவாய்ந்த வளங்கள் மற்றும் வளவாளர்களையும் அடையாளம் காண்கின்றது. இச்செயற்றிட்டமானது அனைத்து WROsகளுக்கும் தனிப்பட்ட இயலளவு விருத்தித் திட்டங்களையும் WROsகளின் இயலளவுத் தேவையை பூர்த்தி செய்வதும் அவற்றின் இயலளவு விருத்திக்கு உதவக்கூடிய நிபுணர்கள் மற்றும் நிபுணத்துவ நிறுவனங்களை அடையாளம் காண்பதுமான செயற்றிட்டத்திற்கான தொகுக்கப்பட்ட பயிற்சி ஒன்றையும் உருவாக்கியது.

இயலளவு விருத்தித் திட்டமானது இந்த விளைவுகளை அடைந்துகொள்வதற்கு தலைப்புகளின் விரிவான வரிசையை உள்ளடக்கியிருந்தது. இவை பெண்களை வலுவூட்டுவதற்கான பெண்ணிய அணுகுமுறைகளின் அடிப்படைக்கொள்கைகள்பற்றிய அறிவை மேம்படுத்துதல், கருத்தியல் அணுகுமுறை பற்றிய கட்டுரை மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான பணிகளில் எழுகின்ற போக்குகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இது, பிரச்சினை ஆய்வு, சமூக-பொருளாதார, சமூக-அரசியல் மதிப்பீடுகள், மாற்றத்திற்கான கொள்கைகளைப் புரிந்துகொள்ளுதல் என்பவற்றுடன் முன்மொழிவு தயாரிப்பதற்கான தொழில்நுட்பரீதியாக எழுதும் திறன்களுக்கான இயலளவை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டிருந்தது.



புகைப்பட விளக்கம்: பங்காளர் WRO களுக்கு நடாத்தப்பட்ட முன்மொழிவு தயாரிப்பு பயிற்சிப்பட்டறை

மேலும், இத்திட்டமானது வருடாந்த திட்டங்களுடன் இணைந்த மூலோபாயத்திட்டங்களின் உருவாக்கம், நிதியீட்டும் உபாயங்கள், அத்துடன் மீள்மதிப்பாய்வு, மற்றும் WRO களின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்களினை சாத்தியமாக மீளாய்வு செய்தல், நிறுவன கொள்கை ஆவணங்களை உருவாக்குதல் மற்றும் நிர்வாகம், மனிதவளம் மற்றும் நிதி முறைமைகளை உள்ளடக்கிய பயனுறுதிமிக்க முகாமைத்துவ மூலோபாயங்கள் என்பவற்றை வலியுறுத்துகின்றது.

இத்திட்டமானது பெண்களைப் பாதிக்கும் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் சர்வதேச கடப்பாடுகள் தொடர்பான தொழினுட்ப அறிவுடன் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் பாதிப்புற்று மீந்தோருக்கு உதவுவதிலான அடிப்படைத் திறன்கள் என்பவற்றையும் வெளிப்படுத்துகின்றன. புதிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மீதான வலியுறுத்தலுடன் ஆதரித்து வாதிடுவதற்கான பரப்புக்களை இனங்காண்பது, பொருத்தமான உத்திகள் மற்றும் பிரச்சார கருவிகள் என்பவற்றை இனங்காண்பது உட்பட கண்காணிப்பு, மதிப்பீட்டு நுட்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், அதிகாரப்பகிர்வு இயக்கவியலை ஆதரிக்கின்ற அதேநேரம், இயலளவு விருத்தித் திட்டமானது தலைமைத்துவ இயலுமைகளை வளர்ப்பதையும் இலக்காகக்கொண்டுள்ளது.

இயலளவு விருத்தித்திட்டத்தின் அமுலாக்கமானது பெண்ணியக்கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளினுள் ஆழமாக வேரூன்றப்பட்டு, பெண்ணிய விழுமியங்களுடன் ஒத்துசெல்வதாக, உள்ளிணைப்பு மற்றும் பங்குபற்றல்பற்றிய கவனத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.

## மகளிர் உரிமை நிறுவனங்களின் இயளவை விருத்தி செய்வதற்கான பிரதான அணுகுமுறைகள்

### கூட்டு மற்றும் தனிப்பட்ட இயலுமை விருத்தி

கூட்டு இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டமானது பலவருட நிதி பெற்ற பங்காளர்கள், துரித பதிலளிப்பு பங்காளர்கள் மற்றும் செயற்றிட்டத்திடமிருந்து எந்த நிதியுதவியும் பெறாதபோதும் பங்குபற்றுவதில் ஆர்வமாக இருந்தோர் உட்பட அனைத்து பங்காளருக்கும் உரியதாகும். இக்கூட்டுப்பயிற்சியானது ஒரு வரிசை தலைப்புகள் மற்றும் சேவை வழங்கல், தலைமைத்துவம், ஆதரித்து வாதிடல், நிறுவன முகாமைத்துவம் என்பவை தொடர்பான தொழில்நுட்ப அறிவு மற்றும் நிதிதிரட்டல் அத்துடன் நிறுவன அபிவிருத்தி போன்ற நிலைபேண்தகு அணுகுமுறைகள் உள்ளிட்ட திறன்விருத்தி என்பவற்றைக்கொண்டுள்ளது. பெண்கள் உரிமைகள் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் தொடர்பில் பணியாற்றும் பங்காளர் WROs மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு, எண்ணக்கருத்துருவாக்கம், நிறுவன மற்றும் நிதி முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், தகவல் தொடர்பாடலும் ஊடகங்களும், தொகுதி உருவாக்கம் (constituency building) மற்றும் நிலைபேண்தகு மூலோபாயங்கள் என்பவை தொடர்பிலும் உதவி வழங்கப்பட்டது. இந்த கூட்டு இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சகபாடிகளுடனான கற்றலுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியதுடன் பல நிகழ்வுகள் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்வனவாக அமைந்தன. இக்கூட்டு இயலளவு விருத்தியில் எதிர்பாராத ஒரு விளைவாக WROsகளுக்கிடையேயான முறைசாரா வலையமைப்புக்கான ஒரு தளத்தை வழங்கியது. பல வருடங்களாக பங்காளர் களையும் அதேபோல் பங்காளர் அல்லாதவர்களையும் இயலளவு விருத்தி ஆரம்பமுனைப்புகளுக்காக ஒன்றிணைத்தமை குறிப்பான விடயங்களில் கூட்டிணைவையும் அறிவுப்பகிர்வையும் இயலச்செய்தது.

இயலளவு விருத்தியில் கூட்டிணைந்தமைக்கு மேலதிகமாக, WVL-SL ஆனது தனிப்பட்ட இயலளவு விருத்தி அணுகுமுறையைக் கைக்கொண்டது. இதன்மூலம் செயற்பாட்டு இயலளவு விருத்தித் தேவைகளை வெளிப்படுத்துவதற்கு தனிப்பட்ட உள்ளகப் பயிற்சிகளை

ஒழுங்கமைப்பதற்கு WROs வசதி செய்தனர். இந்த ஆரம்பத்திட்டமானது தனிப்பட்ட இயலளவு விருத்தி ஆதரவு மற்றும் சரிசெய்தலுக்கான வழிகாட்டிகளைப் பணிக்கு அமர்த்துவதற்கு உதவுவதற்கானது ஆகும். எவ்வாறாயினும் இவ்வகையான ஒட்டுமொத்த ஆதரவை வழங்குவதற்கு, குறிப்பாக பெண்ணிய அணுகுமுறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுக்கு கடும் பற்றாக்குறை உள்ளமையால் இதனைத் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்த இயலாது. இதனை ஈடு செய்வதற்கு WVL-SL ஆனது WROs களுடன் நெருக்கமான ஆலோசனை மேற்கொண்டதுடன் ஆதரவை வழங்குவதற்கான நிபுணர்களையும் அடையாளங்கண்டது. இந்த அணுகுமுறையானது தமது சொந்தத்தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் முன்னுரிமைப்படுத்துவதற்கும் இயலளவு விருத்தியின் விளைவுகள் தொடர்பில் தொழில்நுட்ப நிபுணர்கள்பற்றிய அவர்களது எதிர்பார்ப்பினை வெளிப்படுத்துவதற்கும் WROs ஐ வலுப்படுத்தியது. தமது ஒவ்வொரு செயன்முறைகளிலும் பெண்ணிய கருத்தியல் அணுகுமுறை, ஈடுபடுகின்ற அனைவரதும் பங்குபற்றல் மற்றும் அர்த்தமுள்ள ஈடுபாட்டை உள்ளடக்குவதற்கான முறைகள், உள்ளூர் மொழிகளிலான எளிமையான முறைமைகளின் பயன்பாடு மற்றும் செயன்முறை மற்றும் பெறுபேறுகளில் WRO உரிமையாண்மை உள்ளிட்ட பெண்ணிய முறைமையான அணுகுமுறைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதை WROs களும் உறுதிசெய்தன.

தொழில்நுட்ப நிபுணர்களுடனான இத்தொடர்புகள் செயற்றிட்டத்திற்கு அப்பாலும், தேவை ஏற்படும்போதும் இயலுமை விருத்திக்கான நிலைத்த அணுகலை தொழில்நுட்ப நிபுணர்களுடனான இத்தொடர்புகள் இயலச்செய்வதால் முன்னேறிச்செல்கின்ற WROsகளுக்கு அவை பெறுமதியானவையாக இருக்கும். மேலும் இது, மிகவும் முறைமையான மற்றும் கருத்தியல்ரீதியாக சிறந்த முறையிலான ஆரம்பமுனைப்புகளை இனங்கண்டு வெளிவாரியாக கொண்டுசெல்வதற்கான WROs களின் இயலுமைகளையும் மேம்படுத்தியுள்ளது.

### மேம்படுத்தப்பட்ட தனிப்பட்ட இயலளவு விருத்தி ஆதரவுக்கான வேலையின்போதான முறைசாரா வழிகாட்டல்

இது செயற்றிட்டத்தின் ஆரம்பத்திலிருந்து ஒரு இயலளவு விருத்தி அணுகுமுறையாக ஆரம்பிக்கப்பட்டது. வேலையின்போதான வழிகாட்டலானது பங்காளர் WRO களின் முழுமையான இயலளவு விருத்திக்கு குறிப்பிடத்தக்களவு பங்காற்றி செயற்றிட்டத்தின் காலம் முழுவதும் தொடர்ந்தது. பெண்ணியக்கொள்கைகளை மையமாகக்கொண்டு, இவ்வழிகாட்டலானது களத்தரிசிப்புகள், தொலைபேசி உரையாடல்கள், நிகழ்நிலை கூட்டங்கள் மற்றும் செயற்றிட்ட முன்மொழிவுகள், பாதீடுகள் மற்றும் கொள்கைகள் போன்ற பல்வேறு ஆவணங்களை மீளாய்வு செய்தலும் உருவாக்கத்திற்கு ஆதரவு வழங்கலும் போன்ற பல்வகை வடிவங்களைக் கொண்டிருந்தது.

இந்த அணுகுமுறையானது குறிப்பாக WRO முகாமைத்துவம், செயற்படுத்தல் மற்றும் நிதி திரட்டுதலுக்கான இயலுமைகளை மேம்படுத்துவதில் காத்திரம்மிக்கதாக இருந்தது. நீண்டகால நிறுவன நிலைபேண்தன்மைக்கு நிதி திரட்டுதலின் முக்கியத்துவம்பற்றிய WROs களிடையே அதிகரிக்கப்பட்ட விழிப்புணர்வு இதன் முக்கியமானதொரு விளைவாக இருந்தது. இதன் விளைவாக செயற்றிட்டத்தை அடையாளம் காணல், முன்மொழிவு தயாரித்தல், நிதி வழங்குனருடனான தொடர்புகள் மற்றும் கண்காணிப்பு போன்ற செயற்பாடுகளிலான கவனத்துடன் தமது நிதி திரட்டும் இயலுமைகளை மேம்படுத்துவதற்காக WVL-SL குழுவின் வேலையின்போதான வழிகாட்டுதலை WROs, தீவிரமாக நாடினர். இந்த அணுகுமுறையானது உறுதியான, புதிய நிதிகளை வினைத்திறனுடன் முகாமை செய்யக்கூடிய முகாமைத்துவ, நிதியியல் மற்றும் செயல்படுத்தல் முறைமைகளை உருவாக்குவதற்கு அவசியமாகும்.

திறந்த கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டுப் பிரச்சினை தீர்வு என்பன WRO பங்காளர்களை நிதியியல் மீளுந்தன்மை, உத்தியோகத்தர்களின் இயலளவுகளை முன்னேற்றுதல் செயற்றிட்ட இடையீடுகளைக் கைக்கொள்ளல் மற்றும் சிறந்த செயலாற்றுகைகளை அமுல்படுத்துதல் என்பவற்றை மேம்படுத்துவதுடன் தொடர்புடைய தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வலுவூட்டியது. இந்த ஈடுபாடு கள யதார்த்தங்கள் பற்றிய

பெறுமதி வாய்ந்த புரிதல்களை வழங்கியதுடன் பங்காளர்களுக்கான தொழினுட்ப ஆதரவை வழங்குதை வளப்படுத்தி WVL-SL குழுவிற்கு நன்மை அளித்தது.

… எனது நிறுவனமும் நானும் தனியாக உணர்ந்ததில்லை நாடெங்குமுள்ள சகோதரிகளின் சேனையுடன் நாம் இணைக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையினால் நாம் வலுவூட்டப்பட்டுள்ளோம்…

(ஜுவரியா மொகிதீன், நிறைவேற்றுப்பணிப்பாளர், இஸ்லாமிய பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம், ஹுஏடு-ஞடு செயற்றிட்டம் மற்றும் அதேபோன்ற சிந்தனைகொண்ட நாடெங்குமுள்ள அமைப்புகள் வழங்கிய ஆதரவு குறித்துப் பேசுகின்றார்)

ஏனைய இது போன்ற எடுத்துக்காட்டுகளிடையே, கமி காந்தா பெரமுன (காலி மாவட்டம்) முகாமைத்துவம் மற்றும் செயல்பாட்டு ஆதரவை ஹுஏடு-ஞடு ஆதரவு வழங்கிய செயற்றிட்டங்களுடன் ஒருங்கிணைத்தது.

Shyamala Sivagurunathan, a member of the WVL-SL Technical Committee
சியாமளா சிவகுருநாதன், WVL-SL தொழில்நுட்பக்குழுவின் ஒரு உறுப்பினர்



படவிளக்கம்: வவுனியாவிலுள்ள கிராமியப் பெண்கள் அமைப்பு அலுவலகத்தில் களத்தரிசிப்பு

## அதிகார இயக்கவியலைத் தீர்வு செய்வதற்கான அதிகாரமளித்தல் அணுகுமுறை

WVL-SL இற்கும் WROs களுக்கும் இடையேயான நன்கொடையாளர் - நிதி பெறுநர் அதிகார இயக்கவியல் தொடர்பில் WVL-SL கவனமாக இருந்ததுடன் அதனைத் தீர்வு செய்வதற்காக பங்குபற்றல் மற்றும் வலுவூட்டல் என்பவற்றின் பெண்ணியக்கொள்கைகளுடன் விளங்கியது. இந்த நிலைப்பாடு WVL-SL ஐ ஒரு நடுநிலையான நிறுவனமாகவும் வெளிப்படையாக சவால்களைக் கலந்துரையாடுவதற்கும் தீர்வுகளை காண்பதற்கான உதவியைத் தேடுவதற்குமான ஒரு பாதுகாப்பான நெகிழ்வான வெளியாகவும் உருவாக்கியது. WVL-SL ஆனது தொடர்ச்சியாகவும் வெளிப்படையாகவும் சம பங்காண்மை என்ற அணுகுமுறையில், அவர்களது நிகழ்ச்சித்திட்ட முகாமை மற்றும் செயற்படுத்தல் நடைமுறைகளிலான உதவியை பெறுவதற்கான பங்காளர்களது ஆர்வத்தையும் விருப்பையும் காண விழைந்தது. இதன்மூலம் அது அவர்களின் சுயாட்சிக்கும் தனித்துவத்துக்கும் மதிப்பளித்தது.

அடையாளங்காணல், தெரிவு செய்தல், விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டுனர்களை ஒப்பந்தம் செய்தல் ஆகியவற்றிலான WROs களின் தீவிர ஈடுபாடு, தீர்மானம் இயற்றும் செயன்முறையில் அவர்களது தீவிர ஈடுபாட்டை வசதிப்படுத்தி, அவர்களது உரிமையாண்மையையும் ஆர்வத்தையும் விளக்கிக்காட்டியது. இந்த அணுகுமுறையானது தமது தேவைகளை அடையாளங்கண்டு தீர்வுகளை நாடுவதற்கான WROs'களின் இயலுமையை மேம்படுத்தியது மட்டுமன்றி பெண்ணிய முறைமை அணுகுமுறையை உள்ளிணைத்துக்கொள்வதற்கான அவர்களது இயலுமையையும் பலப்படுத்தியது.

## சூழ்நிலை மாற்றங்களைத் தீர்வு செய்வதற்கான படிப்படியான அணுகுமுறை

இயலளவு விருத்திக்கூறு தொடர்புடையதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் இருப்பதற்கு சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப மாறிக்கொள்வதும் தேவைகளை மாற்றிக்கொள்வதும் பிரதானமாகும். இயலளவு விருத்தி திட்டம் ஒரு உறுதியான சட்டகத்தை வழங்கிய அதேவேளை, இயலளவு விருத்தித் திட்டத்தினை நேரடியாக அமுல்படுத்துவதில் கொவிட்-19 மற்றும் பொருளாதார இடர் என்பவற்றால் சவால்கள் ஏற்பட்டன. இது செயற்றிட்டக்குழு, சூழ்நிலை மாற்றம் மற்றும் WROs கள் மற்றும் அவர்களது மக்கள்தொகுதிகளதும் முன்னுரிமைகள் என்பவற்றுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ள உந்தியது.

முதலாவது பிரதான மாற்றமானது இயலளவு விருத்தியை வழங்கும்போது நிகழ்நிலையில் அல்லது இரண்டும் சேர்ந்த(பகுதி நிகழ்நிலை/பகுதி நேரடியான) முறையில் பணியாற்ற நேர்ந்தமை ஆகும். இம்மாற்றத்தை இயலச்செய்வதற்காக செயற்றிட்டமானது இலத்திரனியல் கருவியை விநியோகிப்பதற்கும் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்யவேண்டியிருந்த அதேவேளை, அது பரந்தளவிலான உத்தியோகத்தர்களுக்கு (பயணச்செலவு குறைந்த காரணத்தாலும் ஒரே நிகழ்நிலை அமர்வில் கூடுதலானவர்கள் பங்குபற்றக்கூடியதாக இருந்ததாலும்) பரந்த மற்றும் செறிவான நோக்குடைய உள்ளடக்கத்தையும் உள்ளடக்க முடிந்தது. (கூடுதல் செலவின்றி பல நிகழ்நிலை அமர்வுகளை நேர வினைத்திறனான முறையில் நிகழ்த்தக்கூடியதாக இருந்ததால்)

இரண்டாவது மாற்றமானது மூலோபாய அமுலாக்கல் இயலளவு ஆரம்பமுனைப்புகளுக்கு ஏற்பட்டது. WROs களின் அறிவு மற்றும் கிரகித்தல் என்பவற்றின் வெவ்வேறு மட்டங்கள் காரணமாக WVL-SL ஆனது இயலளவு விருத்தி அமுலாக்கல் திட்டத்தைக் கைக்கொள்ள வேண்டியிருந்தது. WVL-SL குழுவானது மேலும் விபரமான அமர்வுகளை வடிவமைத்தல், மேலதிக திறன் பயிற்சிகளை வழங்குதல், நேரடிப்பயிற்சிகளை வழங்க முன்னர் பல முன்னமர்வுகளை நடாத்துதல் இயலளவு விருத்தி ஆரம்ப முனைப்புகளுக்கு பல செய்முறைக் கூறுகளை உள்ளடக்குதல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது

மூன்றாவது மாற்றமானது பெண்ணிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு அனுபவம் கொண்ட, WROஇன் வட்டாரத்தைச் சேர்ந்த, தேவையான மொழித்தேர்ச்சி, பணத்திற்கான பெறுமதி என்பவற்றுடனான பயிற்சியாளர்கள், வளவாளர்கள் மற்றும் வழிகாட்டுனர்களை இயலுமை விருத்தி ஆதரவை வழங்குவதற்காகப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்பானது. எவ்வாறாயினும், செயற்றிட்டமானது தனது சொந்த உத்தயோகத்தர்கள், செயற்றிட்ட குழுக்களிலிருந்து(தெரிவுக்குழுக்கள் மற்றும் தொழில்நுட்பக்குழுக்களிலிருந்து) உள்ளக பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகளைப் பெற்றுக்கொண்டதுடன் WROs இற்கு ஆதரவு வழங்கிய, செயற்றிட்டம் நிறைவுபெற்ற பின்னர் தொடர்ந்தும் ஆதரவு வழங்கக்கூடியவர்களாகக் காணப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் வளவாளர்களுடனும் உறவைத் தக்க வைத்துக்கொண்டது.

WRO பங்காளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான இயலளவு விருத்தி ஆரம்ப முனைப்புகளை இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தித் திட்டமிட்டு வடிவமைத்தலுக்கு கருதத்தக்களவு நேர முதலீடு தேவைப்படும். விளைவாகக் கிடைத்த, செயற்றிட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயலளவு விருத்திச் செயன்முறையானது WVL-SLசெயற்றிட்டத்திற்கான ஒரு கற்கை ஆகும். அத்துடன் சவால்மிகுந்த பெருந்தொற்று மற்றும் பொருளாதார இடர்க் காலத்தில் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையினால் இது உருவாக்கப்பட்டது. அத்துடன் செயற்றிட்டத்தின் ஒரு சிறந்த செயலாற்றுகையாகவும் இது கருதப்படுகின்றது.

## நீண்ட கால நிறுவன நிலைபேண் தன்மை மற்றும் உரிமையாண்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கு செயற்றிட்ட செயற்பாடுகளினுள் உள்ள இயலளவு விருத்தியை ஒருங்கிணைத்தல்

தமது நிறுவன முகாமைத்துவம் மற்றும் செயல்படுத்தல் இயலளவுத் தேவைகளை இனங்காணுமாறும் அவர்களை நீண்டகால திறன்கள் மற்றும் வளங்களுடன் வலுவூட்டி நீண்டகால நிலைபேண்தன்மை மற்றும் WROs களின் உரிமையாண்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு வழியாக WVL-SLஇனால் நிதியளிக்கப்படும் செயற்றிட்டங்களினுள் அவற்றை ஒருங்கிணைக்குமாறும் WROs ஊக்கப்படுத்தப்பட்டன. இந்த அணுகுமுறையானது கொடை வழங்குனர்கள் பொதுவாக நிறுவனத்தை வலுப்படுத்தும் முயற்சிகளுக்குப்பதிலாக முற்கூட்டியே வரையறுக்கப்பட்ட செயற்றிட்டம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கே நிதி வழங்குகின்றதான வழமையான நடைமுறைகளிலிருந்து வேறுபட்டிருந்தது. தமது நிறவன இயலளவு விருத்தித் தேவைகளை விசேட செயற்பாடுகளாக தமது நிதியளிக்கும் செயற்றிட்டத்தினுள் சேர்த்துக்கொள்ள WRO பங்காளர்களை இயலக்கூடியதாகச் செய்ததன்மூலம் அது WROs களின் நிறுவன செயல்பாட்டினை பொதுவிலும் விசேட விடயங்களிலும் மேம்படுத்தியது.

பொதுவான விடயங்கள் நிறுவன மூலோபாயத் திட்ட உருவாக்கம், நிறுவன நிதி திரட்டும் மூலோபாயங்கள், நிதி மற்றும் நிர்வாக கையேடுகள் உள்ளிட்ட நிதிக்கொள்கை மற்றும் நடைமுறைகள், பல்வேறு செயல்படுத்தல் மற்றும் நிர்வாக கருவிகள், நிறுவன யாப்பு திருத்தம், பெறுபேற்று அறிக்கையிடல் முறைமை, இடர் முகாமைத்துவ திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டமிடலுக்குள் பெண்ணியக் கோட்பாடுகளை உள்ளிணைத்துக்கொள்ளல், நிர்வாக கொள்கை மற்றும் நடைமுறைகளது மீளாய்வும் திருத்தமும் தரவுத்தளங்களின் உருவாக்கம், உத்தியோகத்தர்களுக்கான வேலை விபரணங்களின் உருவாக்கம், பால்நிலைக் கொள்கைகள், துன்புறுத்தலுக்கெதிரான கொள்கைகள், செயற்பாடு மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடலின் நிறுவன மதிப்பீடு, தரவுகளின் பண்பறி மற்றும் அளவறி பகுப்பாய்வுகள் மற்றும் காட்சிப்படுத்தல் மற்றும் ஆதரித்து வாதிடுவதற்கான தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் ஆதரித்து வாதிடும் ஆரம்ப முனைப்புகளுக்கான கைத்தொலைபேசியைப் பயன்படுத்திக் காணொளி துண்டங்கள் உள்ளிட்ட ஆதரித்து வாதிடும் முறைமைகள் என்பனவாகும்.

விசேட இடையீடுகள், தொழில்முனைவு அபிவிருத்தித்திட்டம், முகாமைத்துவ முறைமைகளுக்கான உத்தியோகத்தர்கள் கணணி திறன் அபிவிருத்தித்திட்டம், உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான உள ஆரோக்கிய நல முகாமைத்துவ உதவி முறைமைகள், அரசாங்க NGO செயலகத்தில் நிறுவனப் பதிவுக்கான ஆதரவு(தேவையான அனைத்து சட்ட மற்றும் ஏனைய ஆவணப்படுத்தல்கள் உட்பட), WRO இயக்குனர் சபையில் சமூக பிரதிநிதித்துவத்தை உள்ளடக்குவதற்கான ஆதரவு, வர்த்தகரீதியான பாலியல் தொழிலாளர்களுக்கான உதவித் திட்டம் ஒன்று, நட்பாதல் மற்றும் சட்ட உதவி தொடர்பான ஒரு மதிப்பீடு, இருக்கின்ற ஒரு நூலக முறைமையை புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான முறைமைக்குத் தரமுயர்த்துதல், வளவாளர்களின் இயலுமை விருத்தியில் பங்குவகிக்கும் செய்முறையையும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தீர்வு செய்வதில் அவர்களது ஈடுபாட்டையும் ஆவணப்படுத்துதல், தனிநபர் சீர்திருத்தத்திற்கான ஆதரித்து வாதிடும் பங்களிப்பு தொடர்பான ஒரு நிறுவன மதிப்பீடு, சம்பவ முகாமைத்துவம் தொடர்பில் தரவுத்தள கணணிமயப்படுத்தல், முன்பதிவு அல்லது நியமனம் இல்லாமல் முறைசாரா அடிப்படையில் வருகை தரும் நிலையங்களுக்கான(Drop-in center) வழிகாட்டுதல்கள் மற்றும் வர்த்தகரீதியான பாலியல் தொழிலாளர்களது நிலையத்திற்காக தரவுத்தளம், நிறுவனத்திற்கான வலைத்தளம், நுண்கடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தரவு முகாமைத்துவ அமைப்பு உருவாக்கம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பில் பணியாற்றும் WROகளின் சேகரிப்பிற்கான தொழிலாளர் உரிமைகள் வழக்குகள் தொடர்பான ஒரு மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்கும்.

இந்த அணுகுமுறையானது WRO உத்தியோகத்தர்களுக்கு கற்கைகளைப் பரப்புவதற்கும் உள்ளக இயலளவு தக்கவைப்பை உறுதி செய்வதற்கும் வசதியளித்தது. WROகளை இப்பிரதான விடயப்பரப்புகளில் முதலிடுவதற்கு இயலச்செய்து, WVL-SLஇற்கும் அப்பால் அவர்களின் நீண்ட கால நிலைத்திருக்கும் தன்மைக்கு பங்களித்ததுடன் பெண்கள் உரிமைகள் மற்றும் பால்நிலை சமத்துவம் என்பவற்றிற்கான அவர்களது பங்களிப்பை மேம்படுத்தின. கொடையாளர்களிடையே செயற்பாட்டு இயலளவு விருத்திக்கான அங்கீகாரம் வளர்ந்துவருவதை, கொடையாளர் நிதியளிக்கும் செயற்றிட்டங்கள் மற்றும் பொறிமுறைகளிடையே இவ்வாறான இயலளவு விருத்தி ஒருங்கிணைப்பு அதிகரித்துவருவதனை சான்றாகக் கொண்டு, WVL-SL அவதானித்தது.

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்திற்கு வழங்கப்பட்ட உதவியானது குறிப்பாக கவனிக்கத்தக்கது. இந்நிறுவனமானது தெளிவற்ற தொடர்பாடல், ஒன்றுடன் ஒன்று தெளிவற்ற பணிகள், உத்தியோகத்தர்கள் அதிகளவில் விலகுதல் மற்றும் திறன்விருத்திக் குறைபாடு என்பவற்றை விளைவாக்கிய எல்லைப்படுத்தப்பட்ட நிர்வாக முறைமையுடன் போராடிக்கொண்டிருந்தது. இந்நிறுவனமானது இஸ்லாமியச் சட்டங்களை மறுசீரமைப்பதற்கான அதன் உரிமைகள் அடிப்படையிலான முன்னேற்றகரமான ஆதரித்து வாதிடும் அணுகுமுறைகளால் சமூக எதிர்த்தாக்கங்களை எதிர்கொண்டிருந்ததுடன் இந்த சவால்கள் அழுத்தம் நிறைந்த, புறச்சூழலால் மேலும் மோசமாக்கப்பட்டன. இது முகாமைத்துவத்தை மேலும் சிக்கலானதாக்கியதுடன் இஸ்லாமிய பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் எதிர்கொண்ட செயற்பாட்டுத் தடைகள் அதன் ஊழியர்களது தனிப்பட்ட நல் வாழ்வையும் பாதித்தது. WVL-SLஇன் உதவியுடன் ஒரு வெளிவாரி நிபுணரது உதவியுடன் நிறுவனம் குறிப்பான சவால்களை இனங்காண முடிந்தது. WVL-SL ஆதரவளித்த செயற்றிட்டத்தினுள் குறிப்பான செயற்பாடுகளை ஒருங்கிணைத்ததன்மூலம், இஸ்லாமிய பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் பயனுறுதிமிக்க நிர்வாக கொள்கைகள் மற்றும் கருவிகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. மேலும், அவர்கள் தமது உத்தியோகத்தர்களது அறிவு மற்றும் திறனை மேம்படுத்தினர், சேவைகளை முன்னேற்றினர், தரவு சேகரிப்பு மற்றும் ஆவணமாக்கல் செயன்முறைகளை மேம்படுத்தினர், அறிக்கையிடல் பொறிமுறைகளை மேம்படுத்தினர் அத்துடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டைப் பலப்படுத்தினர். மேலும் நிறுவனமானது சமூக மறுதாக்கம் ஏற்படுத்திய அழுத்தத்தினால் தனது உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட மன அழுத்தத்தை முகாமை செய்வதற்கான ஆதரவையும் வழங்கியது. இந்த ஆதரவானது நிறுவன உத்தியோகத்தர்கள்

மற்றும் உறுதியான தலைமையினால் வெளிப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் விருப்பு என்பவற்றினால் இஸ்லாமிய பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் நிறுவன முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்தல் இயலளவுகளை மேம்படுத்தியது.

ஆசிய மன்றத்தின் செயற்றிட்டமானது இந்நிறுவனத்தைப் புத்துயிரூட்டுவதில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவந்துள்ளது. மூலோபாயத் திட்ட உருவாக்க பயிற்சிப்பட்டறையானது எமது பயணம் பற்றி எடுத்துரைப்பதற்கு உதவியதுடன் நிறுவனத்தைப் புத்துயிரூட்டுவதில் எமக்குத் தேவையான பலத்தையும் நோக்கையும் வழங்கியது. தற்போது நாம் NGO செயலகத்தில் பதிவு செய்வதற்கான முயற்சிகளை எடுத்துள்ளோம்.

எமது யாப்பினை மீளாய்வு செய்வதற்கும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தைக்கூட்டி, ஈடுபாடின்மை காரணமாக கடந்த சில வருடங்களாக நன்கு செயற்படாத இயக்குனர் சபையை மீள்நியமனம் செய்வதற்கும் நாம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம்.

சிரியானி பத்திரஜே
தலைவர்
கமி காந்தா பெரமுன (காலி மாவட்டம்)

## விமர்சனரீதியான பிரதிபலிப்பினை இயலளவு விருத்தியின் ஒரு அணுகுமுறையாக ஊக்குவித்தல்

இது, விசேடமாக, WROsகளுக்கு பெண்ணிய எண்ணக்கருக்கள், கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளைக் கற்றுக்கொள்வதற்கு பயனுறுதிமிக்கதாக இருந்தது. இந்த அணுகுமுறையானது விரிவுரை வடிவ கற்றலாக இல்லாமல், கற்றல் வெளியீடுகளை மேம்படுத்துவதற்காக, பெண்ணிய எண்ணக்கருக்கள், கொள்கைகள், கோட்பாடுகள் என்பவற்றில் தாம் ஏற்கனவே செய்தவை மற்றும் அறிந்திருந்தவை என்பவற்றுடன் தொடர்புபடுத்துவதற்கு WROs வழிப்படுத்தப்பட்டதுடன் செய்முறை அறிவுடன் பிரதிபலிப்பு மற்றும் ஆய்வு இணைந்ததாக இருந்தது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பெண்ணிய அணுகுமுறை இயலளவு விருத்தி பயிற்சிப்பட்டறைத் தொடர்கள் மற்றும் பெண்ணிய கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்கை தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தின. தனிப்பட்ட இயலளவு விருத்தி - நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்ட அல்லது WVL-SL குழுவினால் வழிப்படுத்தப்பட்ட வேலையின்போதான பயிற்சி எதுவாயினும், விமர்சன பிரதிபலிப்பினை மேற்கொள்ள WROs ஊக்குவிக்கப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் நிறுவன ஆளுகை என்பவற்றுள் பெண்ணிய விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை உள்ளிணைத்துக்கொள்வதற்கான WRO களின் இயலுமைகள் மேம்படுத்தப்பட்டன.

இந்த அணுகுமுறையானது, வளங்களை அதிகப்படுத்தல், தொழில்நுட்ப நிபுணர்களுடன் தொடர்புபடுத்தல், பாதீடுகளை வரைதல் என்பவற்றை மேற்கொண்ட அதேவேளை WROs களுக்கு, தமது சொந்த சூழமைவில் பெண்கள் உரிமைகள் தொடர்பாக நிகழ்ச்சித்திட்டமிடலை மேற்கொள்ளும்போதான பிரச்சினைகள் மற்றும் இடைவெளிகளை இனங்காணல், பெண்கள் உரிமைகள் எண்ணக்கருக்களில் தமது புரிதலை பலப்படுத்துதல், நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறைகளை தாம் எவ்வாறு பெண்ணிய அணுகுமுறையாக கருத்தாக்கம் செய்யமுடியும் என்பது தொடர்பாக சிந்திக்க ஆரம்பித்தல் என்பவற்றிற்கு வசதியளித்தது. இந்த அணுகுமுறையானது, பிரதிபலிப்பிற்கான வெளியை உருவாக்கியது. அங்கு WROs தமது தனிப்பட்ட பாகுபாடுகள், அனுபவங்கள் மற்றும் அதிகார இயக்கவியல் என்பவற்றை பரிசீலிக்க முடிந்தது. இவை அனைத்தும் பெண்ணிய பணிகளை ஆற்றும் பெண்ணிய நிறுவனங்களாக தம்மை சுய அடையாளங்காண பங்களித்தன.

**சகபாடிகளுடனான கற்றல் அணுகுமுறை**

WROs சமூக ஈடுபாடு மற்றும் வெற்றிகரமான இடையீட்டுக்கான பயனுறுதிமிக்க மூலோபாயங்களை உருவாக்குவதில் விரிவான அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றின் செறிவான வரலாற்றை கொண்டுள்ளன. இவை, சமூக அங்கத்தவர்களுடனான நீண்டகால உறவைக் கட்டியெழுப்புதல், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு, உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான பங்காண்மை, சமூகரீதியாக புறக்கணிக்கப்பட்ட குழுக்களின் உள்ளிணைப்பை உறுதிசெய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமிடலினுள் குறுக்குவெட்டு வில்லையை (intersectional lens) ஒருங்கிணைத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இதன் அதிகபட்ச பயன்பாடாக தமது இந்த அறிவு மற்றும் அனுபவங்களை ஏனைய WROsகளுடன் பகிர்ந்துகொள்வதற்கான பல்வேறு தளங்களை WVL-SL உருவாக்கியது.

கூட்டு இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின்போது தமது விரிவான நிபுணத்துவத்திற்கு WROs குழு, விவாதங்களில் ஈடுபட்டதுடன் அளிக்கைகளை வழங்கியதன் ஊடாகத் தீவிரமாகப் பங்களித்தனர். பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக உள்ளிணைப்பு பயிற்சிப்பட்டறை, முழுமையாக WRO களினால் மேற்கொள்ளப்பட்டது. விசேடமாக, சமூகரீதியாக புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுடன் பணியாற்றிய நிபுணர்கள் உள்ளகநோக்கினைப் பகிர்ந்துகொள்வதற்கும் பயனுறுதிமிக்க நிகழ்ச்சித்திட்டமிடல் தந்திரோபாயங்களினுள் ஊடுருவிப் பார்ப்பதற்குமாக அழைக்கப்பட்டனர். பல WROs குறுக்குவெட்டு அணுகுமுறை ஒன்றை உள்ளிணைத்துக்கொள்ளத் தொடங்கியமையாலும் விளிம்புநிலை குழுக்களை தமது ஆரம்ப முனைப்புகளில் உள்ளிணைத்துக்கொண்ட வகையிலும் இதன் வெளியீடுகள் சாதகமானவையாக இருந்தன.

...எமது மூலோபாய செயல்பாட்டுத்திட்டம் LGBTQIA+ சமூகத்தினரை ... உள்ளிணைக்காத காரணத்தால் அதன் வரைபை நாம் திருத்த விரும்பினோம்... பயிற்சிப்பட்டறையின் பின்னர், நாம் (LGBTQIA+ சமூகத்தினரை) கவனத்தில் எடுக்கவில்லை என்பதையும் உணர்ந்ததுடன் நாம் இவர்களை எமது மூலோபாய செயல்பாட்டுத்திட்டத்தினுள் சேர்க்க விரும்பினோம்... நாம் மாற்றுப்பாலின சிறார்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகும் இடரினுள் இருப்பதை உணர்ந்தோம். எமது பணியில் நாம் இவற்றை அதிகளவில் கண்டுபிடித்தோம். உதாரணமாக, தனது பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாட்டுக்கு அமைவாக ஆடை அணிய அனுமதிக்கப்படாத ஒரு பிள்ளையை மீண்டும் பாடசாலையில் சேர்க்க உதவினோம்...

(மனோரி தந்திரிகே, நிறைவேற்றுப் பணிப்பாளர், ஐக்கிய இலங்கை நலன்புரி அமைப்பு, நுவரெலியா)

WROs தமது செயற்றிட்டங்களினுள் தமது இயலளவு விருத்தி மற்றும் வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை இணைத்துக் கொண்டமையால் தமது அறிவையும் அனுபவங்களையும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர். உதாரணமாக, சமூகத்திலிருந்து பெண்களை அணிதிரட்டி அவர்களின் பொருளாதார வலுவூட்டலை நோக்கித் தீவிரமாக செயற்படும் ஒரு அமைப்பாக பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் வெற்றியானது WVL-SL செயற்றிட்டத்தின் அனேக பங்காளர் WROs களைத் தாமும் இதேபோன்ற மூலோபாயத்தைப் பின்பற்றுவதற்குத் தூ ண்டியது. பெண்கள் அபிவிருத்தி சம்மேளனம் WVL-SL ஆதரவளித்த தமது செயற்றிட்டம் ஊடாக, பல மாவட்டங்களையும் சேர்ந்த ஒன்பது WROs களுக்கு ஒழுங்கமைத்த, வலையைமைப்பு மற்றும் கற்றல் நிகழ்வானது ஒரு வெற்றிகரமானதாகும். இது WROs களுக்கு அவசியமான உள்முகநோக்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான சிறந்த செயலாற்றுகைகள் என்பவற்றை அளித்து மேலதிக தொடர்பாடல்களுக்கான சந்தர்ப்பத்தை தொடக்கிவைத்து எதிர்கால ஒத்துழைப்புகளுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தது.



புகைப்படத்தலைப்பு: பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக உள்ளிணைப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறை

"

எமது சொந்த சமூகங்களிலேயே இக்கற்கைகளைக் கற்பதும் நடைமுறைப்படுத்துவதும் எமக்கு பெரும் ஊக்க உணர்வை அளிக்கின்றது. நாம் எதிர்பார்க்கவேண்டிய சவால்கள் எவை, அவற்றை எவ்வாறு தீர்வு செய்வது CSOs என்ற வகையில் ஒரு சாதகமான எதிர்வினை ஆதரவு நிலைப்பாட்டை எவ்வாறு தக்கவைத்துக்கொள்வது என்பதை தற்போது நாம் சிறப்பாக விளங்கிக்கொண்டுள்ளோம் தற்போது நாம் ஒரு தெளிவான ஆரம்பப்புள்ளியை கொண்டுள்ளோம்.

"

(சமூக நல்வழி மன்றம், நுவரெலியா மாவட்டம். பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்துடனான தமது வலையமைப்பு மற்றும் கள அனுபவங்களின் பின்னர்)

இதேபோல், துரித எதிர்வினை நிதிபெறுநரான சமூக அக்கறைக்கான நிறுவனம் 10 மாவட்டங்களைச் சேர்ந்த பத்து பங்காளர் WROs களுடன் இணைந்து "வயதானவர்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தல் (Feminization of Aging)" பற்றிய மதிப்பீட்டினை நடாத்தியதுடன் சான்றாதார அடிப்படையிலான ஆதரித்து வாதிடலிலும் ஈடுபட்டது. இக்கற்கையானது சமூக அக்கறைக்கான நிலையத்தின் நிபுணத்துவத்தினதும் ஆய்வுக்கு பங்களித்த WROs களின் ஒத்துழைப்பினதும் ஒரு விளைவு ஆகும். சமூக கரிசனைகளுக்கான நிலையத்தின் செயற்றிட்டத்தில் அவர்களின் பங்கேற்பு வயது உள்ளிட்ட உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைகளை தமது பணிகளின் முக்கியமான போக்காகவும் இலங்கையின் அபிவிருத்திச்செயன்முறைகளில் வயது உள்ளிணைப்பை மேலும் முன்னேற்றுவதற்குமான இயலளவைப் பலப்படுத்தியது.

அறிவு மற்றும் அனுபவப்பகிர்வு என்பன WVL-SL செயற்றிட்ட WRO பங்களார்களுக்கும் அப்பால் விரிவாக்கப்பட்டது. ஏனைய அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களோடு தமது நிகழ்ச்சித்திட்டமிடல் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு WROs களும் அழைக்கப்பட்டனர். உதாரணமாக, பெண்களின் தொழிலாளர் உரிமைகளில் கவனம் கொண்ட WROs, கொவிட்-19 பெருந்தொற்றின்போது பெண் தொழிலாளர்கள் எதிர்கொண்ட சவால்கள் பற்றிய விசேட எடுத்துரைப்புடன் ஆசிய மன்ற உத்தியோகத்தர்களுக்கு தமது பணிபற்றி அளிக்கை செய்தனர். மேலும், ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம், 16 நாள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாடு - 2023 இன்போது ஒரு அமர்வை ஒழுங்கு செய்தது. அதில் தமிழ் பேசும் பிராந்தியங்களிலிருந்து கலந்துகொண்ட WROs, பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையைத் தீர்வு செய்கின்ற தமது சமூக மட்ட இடையீடு மற்றும் தடுப்பதற்கான ஆரம்பமுனைப்புகள்பற்றி அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

## WROs களின் அறிவாற்றலை அதிகரிப்பதற்கான தலைமுறைகளுக்கிடையிலான அணுகுமுறை

நிறுவனத்தின் நீண்டகால நிலைபேண்தன்மையின் பொருட்டு இளம் அங்கத்தவர்களுடனான அதிகாரப்பகிர்வு மற்றும் அறிவை இளைய மட்டங்களுக்குப் பகிர்வதை ஊக்குவிப்பதற்கு, இளம் அங்கத்தவர்களுக்கு(சிரேஸ்ட உத்தியோகத்தர்களுடன் இணைத்து) கூட்டு இயலளவு விருத்தி ஆரம்ப முனைப்புகளுக்கான அழைப்பினை விடுப்பதற்கு WROs ஊக்குவிக்கப்பட்டன. பெண்கள் மற்றும் சட்டம் பயிற்சிப்பட்டறை போன்ற குறிப்பிட்ட சில இயலளவு விருத்தி ஆரம்ப முனைப்புகள் தமது சொந்த நிறுவனத்தினுள் அதுபோன்ற பயிற்சிகளை வழங்குவதற்கான திறன்களை பங்குபற்றுனர்களுக்கு வழங்குவதற்கான பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி (TOT) பயிற்சிப்பட்டறைகளாக வடிவமைக்கப்பட்டன.

மேலும், உள்ளக தனிப்பட்ட இயலளவு விருத்தியானது இளம் உத்தியோகத்தர்கள் பயிற்சிகளில் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்தியது. முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்தல் இயலளவு விருத்தியினூடாக, WROs களிடையேயான ஆதரவளிக்கப்பட்ட கூட்டுக்கற்கையின் ஒரு வழியாக நிறுவன யாப்புகள், கொள்கைகள், சிறந்த செயலாற்றுகைகளை ஆவணப்படுத்தல் மற்றும் பயிற்சிக் கையேடுகளைத் தயாரித்தல் என்பவற்றை WROs களால் தயாரிக்க முடிந்தது.

உதாரணமாக, வெர்நதி பெண்கள் கூட்டு என்பது முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் ஆதரவு வழங்கப்பட்ட ஒரு இயக்கம் ஆகும். இது தனது செயற்றிட்டங்களில் தொடர்ச்சியான பயிற்சிமூலம் தலைமுறைகளிடையேயான கூட்டு கற்கையை ஊக்குவிக்கும் பொறிமுறைகளை உருவாக்குவதற்குரியதொரு செயற்பாடு, வழிகாட்டல், அறிவு, அனுபவம், வளங்களைப் பகிர்தல் மற்றும் தெளிவான பார்வையைப் பேணுவதற்கான ஒரு யாப்பினை இயக்கத்திற்காக உருவாக்குதல் மற்றும் புதிய உறுப்பினர்கள் இணையும்போது ஜனநாயக பெண்ணியக் கொள்கைகளை அவர்களுக்கு மாற்றுதல் என்பவற்றைக் கொண்டிருந்தது.

### உள்ளிணைப்பு அணுகுமுறை

கைக்குழந்தைகளுடன் வருகைதந்த தாய்மார் தொடர்பில் அவர்களுடன் பராமரிப்பாளர்கள் இணைந்து வருவதற்கு தாய்மாருக்கு ஆதரவு வழங்கப்பட்டதுடன் பாதுகாப்பான இடங்களை நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதேபோல் மாற்றுத்திறனாளிகளின் அணுகல் மற்றும் தேவையான சம்பந்தப்பட்ட சேவைகள் என்பவற்றை உறுதிசெய்வதிலும் WVL-SL குழுவினால் முழுக்கவனம் செலுத்தப்பட்டது. மொழியியல் இயலுமை நிகழ்ச்சிகள் உள்ளூர் மொழிகளில் நடைபெறுவதை உறுதிசெய்து அனேகமாக, WVL-SL உத்தியோகத்தர்கள் தாமே வழங்கிய விளக்கங்கள், இடைநிலைச் செயல்பாட்டில் திருநங்கைகளின் பங்குபற்றல் குறித்த சிறப்புக் கரிசனைகள் குறித்த கவனம். இவை உள்ளிணைப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தி பங்குபற்றலை ஊக்கப்படுத்துவதற்கு செயற்றிட்டம் பயன்படுத்திய சில வழிமுறைகள் ஆகும். இந்த உள்ளிணைப்பு அணுகுமுறையானது இயலளவு விருத்தி என்பது அனைவருக்கும் அணுகக்கூடிய ஒன்று என்பதை உறுதி செய்தது.

### மகளிர் உரிமை நிறுவனங்களுக்கான இயலளவு விருத்தியின் முழுமையான விளைவு

WROs களுக்கான WVL-SL செயற்றிட்டத்தின் இயலளவு விருத்தி ஆதரவின் பெறுபேறுகள் முக்கியமானவையும் பன்முகம் கொண்டவையும் ஆகும். விரிவான இயலளவு விருத்தி ஆரம்பமுனைப்புகளுடாக WVL-SL ஆனது, பெண்ணிய அணுகுமுறைகளின் கைக்கொள்ளலுக்கும் பெண்கள் உரிமைகள் எண்ணக்கரு பற்றிய புரிதலுக்கும் வழிவகுத்த அதேவேளை, பங்காளர் WROs களின் செயல்பாடு மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடலில் வெற்றிகரமாக பெண்ணிய விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை ஒருங்கிணைத்தது. அத்துடன் இந்த இயலளவு விருத்தியானது சேவைவழங்குகை மற்றும் ஆதரித்து வாதிடலை மேம்படுத்துதல் என்பதாக விரிவாக்கப்பட்டது. இது புதிய சேவைகளின் அறிமுகம், அதிகரிக்கப்பட்டளவிலான சமூக அடைவு, மற்றும் ஆதரித்து வாதிடும் தளங்களிலான அதிகரித்த ஈடுபாடு போன்ற வெளித்தெரியும் முன்னேற்றங்களை விளைவாக்கியது. மேலும், WVL-SL ஆனது, கொள்கை உருவாக்கம் மற்றும் சட்ட மறுசீராக்கம் என்பவற்றில் தமது தீவிர ஈடுபாட்டை இயலச்செய்து, WROs களிடையே வலையமைப்பாதல் மற்றும் ஆதரித்து வாதிடும் இயலுமை என்பவற்றை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய வகிபாகத்தை வகித்தது. பெருந்தொற்று மற்றும் பொருளாதார இடர் போன்ற சவால்கள் இருந்தபோதும், WROs இலங்கையில் முக்கியமான கொள்கை மாற்றங்களுக்கு பங்களித்தபடி, பெண்கள் உரிமைகளுக்காக ஆதரித்து வாதாடி வந்தன. முழுமையாக, WVL-SL'sஇன் இயலளவு விருத்தி ஆதரவானது WROs களைப் பலப்படுத்துவதிலும் நாட்டில் பெண்களின் வலுவூட்டல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை முன்னேற்றுவதற்கான அவர்களின் செயல்பாட்டை ஆதரிப்பதிலும் ஒரு கருவியாக இருந்து வந்துள்ளது.

In partnership with Canada

The Asia Foundation

**செயற்றிட்டத்தைப் பற்றி:** பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம், இலங்கை செயற்றிட்டமானது கனேடிய அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டு ஆசிய மன்றத்தின் இலங்கை அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்செயற்றிட்டமானது, பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுப்படுத்துவதற்காகவும், பெண்கள் மற்றும் சிறுமிகளினது உரிமைகளையும் பாதுகாப்பினையும் மேம்படுத்துவதற்காகவும் பால்நிலை சமத்துவத்தை அடைவதற்கும் எதிர்பார்க்கின்ற உள்ளூர் பெண்தலைமைத்துவமுடைய மகளிர் உரிமை நிறுவனங்கள் மற்றும் இயக்கங்களின் இயலுமை விருத்தி செய்தலையும் அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவி செய்தலையும் நோக்கமாகக் கொண்டது.

**ஆவணத்தைப்பற்றி:** பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம், இலங்கை செயற்றிட்டமானது அதன் செயலமர்வுகள், பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளை இந்த ஆவணத்தினைப் போன்றே 'ஆவண சுருக்கங்களாக்கி' தொடராக ஆவணப்படுத்துகிறது. இவ்வாவணங்களானது நிகழ்ச்சியின் உள்ளடக்கத்தை சுருக்கமாக குறிப்பாக்குவதோடு, முக்கிய கலந்துரையாடல்களை அவதானப்படுத்தி அடுத்த நடவடிக்கைகளையும் குறிக்கிறது. அத்துடன் செயற்றிட்டத்தின் முழுமையான நோக்கத்திற்கும் இலக்கிற்கும் ஆற்றிய பங்களிப்பினையும் முக்கியத்துவப்படுத்துகிறது. மேலும் செயற்றிட்டத்தின் வலையமைப்பு மற்றும் பங்காளர்களான மகளிர் உரிமை நிறுவனங்களிலுள்ள பெண்களின் குரல்களையும் உள்ளடக்குகிறது.

**பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை**
ஆசிய மன்றம்
30/1இ பகத்தலே வீதிஇ கொழும்பு 3.
தொலைபேசி: +94 11 2058701 Email: wvl@asiafoundation.org